பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 22 திங்கட்கிழமை 05.02.2024 அதிர்வு 189

## பாடசாலையில் மரம் முறிந்து வீழ்ந்து மாணவன் மரணம்!

### மேலும் இருவர் காயம்

மரம் முறிந்து வீழ்ந்ததில் 5 வயது பாடசாலை மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

04



### இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில்

# அநுரவை வளைத்த இந்தியா டில்லியில் ஜெய்சங்கர் பேச்சு

### கொழும்பு அரசியலில் பரபரப்பு

இந்திய மத்திய அரசின் அழைப்பையேற்று டில்லி சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருடன் இன்று பேச்சு நடத்தினர்.

இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, செயலாளர் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோர் இந்தியா சென்றுள்ளனர்.

04

# இலங்கையின் அபிவிருத்திக்கு முழு உதவிகள்

## செந்திலிடம் இந்தியத் தூதுவர் உறுதி

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா வை, கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்குத் தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது இலங்கையின் அபிவிருத்திக்கு முழுமையான உதவிகள் வழங்கப்படும் என்று இந்தியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.





# அமைச்சர் பதவியில் இருந்து கெஹலியவை உடன் நீக்குக!

## கையெழுத்து சேகரிக்கும் வேட்டை ஆரம்பம்

கெஹலிய ரம்புக்வெலவை சுற்றாடல் துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு கோரும் மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இன்று ஆரம்பிக்கப்பட்டது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், சுற்றாடல்துறை அமைச்சர் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு அவருக்கு தார்மீக உரிமை இல்லை என்று தெரிவித்து சில சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பொது மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

கொலைக் குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறைச்சாலை வைத்தியசாலையில் மருந்து உட்கொள்வதை மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் அரச மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலை வைத்தியசாலையைத் தொடர்பு கொண்டு ஊடகங்கள் வினவியிருந்தன.

இதற்குப் பதிலளித்த அந்த வைத்தியசாலையின் பேச்சாளர், “அரச வைத்தியசாலையில் மருந்துகளை எடுக்க மறுத்தல் அல்லது தனியார் வைத்திய சாலை செல்லுதல் போன்ற எந்தக் கோரிக்கையும் இதுவரை அமைச்சர் தரப்பிலிருந்து முன்வைக்கப்படவில்லை” – என்று தெரிவித்துள்ளார்.



CLICK HERE VIDEO

*இமாலய பிரகடனம் தொடர்பான கனடிய தமிழ் பேரவையின் நிலைப்பாடு குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு Hilton Suites Toronto Markham இல் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.*






### வட்டுக்கோட்டை பொலிஸார் மீண்டும் வெறியாட்டம்

# யாழ். பல்கலை மாணவன் கொடூரமாகச் சித்திரவதை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறையில் வைத்து பொலிஸார் தன்னைத் தலைகீழாகத் தூக்கி, அடித்து சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில், கருணாகரன் நிதர்சன் எனும் யாழ். பல்கலைக்கழக மாணவன் இன்று இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவிக்கையில்,

“வட்டுக்கோட்டை மாவடி பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் என்னை வழிமறித்து, தான் மறிக்கும் போது ஏன் மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லை என என்னுடன் முரண்பட்டார்.

அதற்கு நான் நீங்கள் மறித்ததை கவனிக்கவில்லை எனக் கூறி, ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள் ளன எனக் கூறி அவற்றை எடுத்துக் கொடுத்தபோது , அதனை வாங்காது, மேலதிக பொலிஸாரை அவ்விடத்துக்கு வரவழைத்தார்.

அதன்போது, சிவில் உடையில் வந்த 7 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி, என்னை வீதியில் வைத்து, மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே கடுமையாகத் தாக்கினார்கள். என்னைத் தாக்கும் சம்பவம் அருகில் உள்ள கடையில் கண் காணிப்புக் கமராக்களில் கூட பதிவாகியுள்ளது. அத்துடன் நானும் எனது கைபேசியில் என்னைத் தாக்குவதை வீடியோ எடுத்தேன்.

பின்னர் என்னைப் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்று, பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறைக் குள் என்னை அழைத்து சென்று என்னுடைய ஆவணங்கள் மற்றும் கைபேசி என்பவற்றைப் பறித்தார்கள்.

கைபேசியின் இரகசியக் குறியீட்டைக் கேட்டபோது, அதனைத் தர முடியாது என நான் மறுத்தபோது, என் கால்களைப் பிடித்து தலைகீழாகத் தூக்கிக் கடுமையாகத் தாக்கினார்கள்.

என் ஆணுறுப்பைக் குறிவைத்தும் கடுமையாகத் தாக்கினார்கள். இதனால் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. வியர்க்கத் தொடங்கியது.

அதையடுத்து என்னை அறையில் இருந்து, வெளியே அழைத்து வந்து , கதிரையில் அமர வைத்து விட்டு சென்று விட்டார்கள்.

பின்னர் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்தேன். என்னைப் பொலிஸாரின் இரகசிய அறைக்குள் அழைத்துச் சென்றதைப் பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் நேற்று தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவர் கண்களால் கண்டார்கள்.

அறைக்குள் வைத்து அடிக்கும் போது, நான் எழுப்பிய அவலக்குரல் அவர்களுக்கும் கேட்டு இருக்கும். அடித்த பின்னர் என்னைக் கைத்தாங்கலாகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அழைத்து வந்து கதிரையில் அமர வைத்ததையும் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவரும் நேரில் கண்டார்கள்.

எவ்வித குற்றமும் இழைக்காத என்னைச் சிவில் உடை தரித்த பொலிஸார் மூர்க்கத்தனமாகத் தாக்கிச் சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். என்னைக் கொலை செய்யும் நோக்குடன் என் ஆணுறுப்பைக் குறிவைத்தும் அவர்கள் தாக்கினார்கள்.

இந்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளமையால் இன்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன்.” – என்றார்.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிஸாரால், கடுமையான சித்திரவதைக்கு உள்ளான நகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த உயிரிழப்பானது ஆட் கொலையே என யாழ். நீதிவான் நீதிமன்றம் மரண விசாரணை கட்டளையில் குறிப்பிட்டுள்ளது

இளைஞரின் கொலை தொடர்பில் நேரடி சாட்சியான, இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞர், சித்திரவதைக்குத் தம்மை உள்ளாக்கியவர்கள் ஐவர் என அடையாளம் காட்டிய போதிலும், பொலிஸார் நால்வரையே கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரம் சுன்னாகம் பொலிஸாரால் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கடுமையாகத் தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கிய நிலையில், கைதான இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார்.

அச்சுவேலி பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, விசாரணைக்குச் செல்லாத இளைஞரை அச்சுவேலி பொலிஸார் வீதியில் வழிமறித்துக் கடுமையாகத் தாக்கியமையால், இளைஞர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் தற்போது வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பொலிஸார் மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மரக்கிளை முறிந்து வீழ்ந்து 14 வயது மாணவன் மரணம்

## நோர்வூட் பகுதியில் சோகம்

(செ.தி. பெருமாள்)

மரம் வெட்டியபோது மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் 14 வயது மாணவன் ஒருவர் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட் நியூட்டன் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் முருகன் அஷால் (வயது – 14) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் சிகையலங்கார நிலையத்துக்குச் சென்று கொண்டிருக்கையிலேயே அவர் மீது மரக்கிளை முறிந்து வீழ்ந்தது. இதையடுத்து அவர், டிக்கோயா– கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இடைவழியில் உயிரிழந்தார்.

மாணவனின் சடலம் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் முறையற்ற வகையில் மரம் வெட்டிய 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இன்று ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது ஐவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிவான் உத்தரவிட்டார்.





# கெஹலியவுக்கு எதிராக மீண்டும் பிரேரணையாம்

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

மருந்து கொள்வனவு மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் கெஹலிய ரம்புக்வெலவை, அமைச்சரவையில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்காத பட்சத்திலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் தெரிவித்தனர்.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தது. எனினும், அது தோற்கடிக்கப்பட்டது. ஆனால், கெஹலிய ரம்புக்வெலவிடம் இருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டு, அது ரமேஷ் பத்திரனவிடம் ஒப்படைக்கப்பட்டது. இருந்தபோதிலும் கெஹலிய ரம்புக்வெல அமைச்சரவையில் சுற்றாடல் துறை அமைச்சராக நீடிக்கின்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அநுரவை வளைத்த...

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். தென்னிலங்கையில் முற்போக்கு சக்திகளின் ஆதரவு அவருக்கு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், அவரை இந்திய மத்திய அரசு அழைத்து பேச்சு நடத்துகின்றமை இலங்கை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### பாடசாலையில்...

கம்பளை பகுதியில் உள்ள சர்வதேச பாடசாலையொன்றிலேயே இவ்வனர்த்தம் இன்று இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் விளையாடிக்கொண்டிருக்கையிலேயே மரம் சரிந்து வீழ்ந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

காயமடைந்த இரு மாணவர்களும் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கம்பளை, இல்லவத்துர பகுதியைச் சேர்ந்த மாணவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.




# மாணவர்களது சுயகற்றல் மட்டுமே முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்!

## பேராசிரியர் மதிவேந்தன் தெரிவிப்பு

ஒரு பாடத்துக்கு நான்கு இடங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. சுயகற்றல் ஒன்றே முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் .

இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற கல்விச் சாதனை யாளர் பாராட்டு விழாவில் உரையாற்றிய கிழக்கு பல்கலைக் கழக தொழில் நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் தெரிவித்தார்.

காரைதீவு ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின் வருடாந்த கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் (03) சனிக்கிழமை காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் செயலாளர் ச.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

காரைதீவு அஸ்கோ மற்றும் ரக்ஸ் அமைப்பின் ஸ்தாபகர் கனடாவில் வதியும் வைத்திய கலாநிதி டாக்டர் அருளானந்தம் வரதராஜாவின் ஏற்பாட்டில் ஏனைய புலம்பெயர் அனு சரணையாளர்களின் பங்களிப்புடன் இந்தப் பாராட்டு பல வருடங்களாக நடைபெற்று வருகிறது.

விழாவில் அதிதிகளாக கிழக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், பொதுச் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நடேசன் அகிலன், பிரதம பொறியியலாளர் ப.இராஜமோகன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகா தேவராஜா, பொறியியலாளர் என்.பிரேமகாந்தன் , வைத்திய அதிகாரி டாக்டர் எல்.லேணுசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக இலங்கை வங்கியின் காரைதீவுக் கிளை முகாமையாளர் திருமதி யாழினி மோகனகாந், அதிபர் எஸ்.மணிமாறன், ஆசிரியர்களான ரி.தெய்வீகன், எஸ்.தேவகுமார்,கே.ருத்ரகுமார், ஈ.சங்கீத், திருமதி ஜே.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உயர்தரம் கற்கும் காலத்தில் நாள் ஒன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் கட்டாயம் சுயகற்றலில் ஈடுபடவேண்டும்.

சுயகற்றல் ஒன்றே வெற்றியைத் தரும். குறிப்பாக ஆசிரியர் கைநூலை படியுங்கள். அதிலுள்ள விடைகளைத் தவிர வேறொன்றுமில்லை.

முடியுமானவரை தொலைபேசிப் பாவனையை குறையுங் கள். நிச்சயம் முன்னேறலாம்.- என்றார்.

இங்கு மூன்று 'ஏ' பெற்ற ஐந்து மாணவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபா பணப் பரிசும் அடுத்த கட்ட பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் ஏனையோருக்கு பதக்கமும் வழங்கப்பட்டன.

புலம்பெயர் அனுசரணையாளர்களான டாக்டர் அ. வரதராசா(கனடா), மு.யோகராசா(கனடா), டாக்டர் த. கௌரிகாந்தன்(அவுஸ்திரேலியா), சி.கருணாநிதி(லண்டன்), பொறியியலாளர் வீ.சத்தியமூர்த்தி( அவுஸ்திரேலியா), பொறியியலாளர் எஸ்.பிரேமகாந்தன்(லண்டன்), ச.ஹரிகரராஜா (லண்டன்) ஆகியோர் விழாவில் பாராட்டப்பட்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சீனாவுக்கு மாலை சூட்டு மாலே

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல் என்று கூறப்படும் 'சியாங் யாங் ஹெங்-3' கப்பல் இந்த வாரம் மாலைதீவு துறைமுகத்தில் வந்து தரிக்க இருப்பது பெய்ஜிங் - புது டெல்லி - மாலே என முத்தரப்பினரிடையே இராஜதந்திரப் பதற்றத்தை அதிகரிக்கச் செய்திருப்பதாக சர்வதேச அவதானிகள் கூறுகின்றனர்.

தனது ஆட்சேபனைகள், எதிர்ப்புகளை மீறி, சீனக் கப்பல் இந்தப் பிரதேசத்துக்குள் வந்து தரிப்பதற்கு மாலே இடம் அளித்திருப்பது தனக்கு விடப்பட்ட ஒரு பெரும் சவாலாக புதுடில்லி நோக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது.

ஆராய்ச்சிக் கப்பல்கள் என்ற பெயரில் இந்தக் கடற் பிராந்தியத்துக்குள் சீனா வந்து மூக்கை நுழைப்பதை ஆரம்பத்தில் இருந்தே புதுடில்லி கடுமையாக எதிர்த்து வருகின்றது.

இது தெரியாமல் அல்லது புரியாமல், சீனக் கப்பலுக்கு ஆரம்பத்தில் இடம் அளித்த கொழும்பு, அதன் விளைவாகப் பலத்த இராஜதந்திர அழுத்தங்களை - நெருக்குவாரங்களை- எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது.

அதனால் கையைச் சுட்டுக் கொண்ட இலங்கை தன்னுடைய கடற்பரப்பில் சர்வதேச ஆராய்ச்சிகளுக்கு ஒரு வருடம் தடை விதிப்பதான அறிவிப்பை விடுத்ததன் மூலம் இந்த நெருக்கடியில் இருந்து தற்காலிகமாகவேனும் நழுவி, தன்னை விடுவித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் மாலைதீவோ புதுடில்லியைப் புறந்தள்ளி, பெய்ஜிங் பக்கம் அணி சேர்ந்ததால் நிலைமை அங்கு வேறு விதமான நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கின்றது.

''இது வழமையான ஆய்வு நடவடிக்கை மட்டுமே. இந்தியப் பெருங்கடலில் அறிவியல் ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்கிறோம். ஆழமான கடற் பகுதியில் இத்தகைய ஆராய்ச்சிப் பணிகள் சட்டபூர்வமானவை. நியாயமானவை.'' - என்று சீனத் தரப்பில் கூறப்படும் சமாதானத்தை இந்தியா ஏற்கவில்லை.

பிற்காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் பரந்த அளவிலான நகர்வுகள், நடவடிக்கைகளுக்கு வசதியான தகவல்கள், தரவுகளைச் சேகரிக்கும் சீனாவின் ஆபத்தான திட்டம் இது என்று இந்திய தரப்புகள் சீற்றதுடன் கூறுகின்றன.

ஆய்வுக் கப்பல்களுக்குரிய அத்தியாவசிய பொருள்களான உணவு, எரிபொருள், குடி தண்ணீர், மருந்துகள் மற்றும் சரக்குகளை நிரப்புவது, ஊழியர்கள், பணியாளர்களை மாற்றீடு செய்வது போன்ற நியாயபூர்வமான காரணங்களுக்காக ஆராய்ச்சி கப்பல்கள் அவ்வப்போது மூன்றாம் நாட்டுத் துறைமுகங்களில் தரிக்க வேண்டி உள்ளன. அத்தகைய வழமையான நடவடிக்கையே இது என்று கூறும் சீனா இன்னொரு விடயத்தையும் அழுத்தமாக முன்வைக்க முனைகின்றது.

''இத்தகைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இந்தியா எதுவித குழப்பமும் அடையத் தேவையில்லை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில்இந்தியாஅமைந்திருக்கின்றது என்பதற்காக இந்தியப் பெருங்கடல் இந்தியாவின் பெருங்கடல் அல்ல'' - என்று சீனத் தரப்புக்கள் வலியுறுத்துகின்றன.

சுமார் 1,200 தீவுகளின் கூட்டமான மாலை தீவு இதுவரை காலமும் இந்தியாவின் செல்வாக்கின் கீழ் இயங்கி வந்தமையால் புதுடில்லிக்கு அதிக சிக்கல்கள் இருக்கவில்லை.

ஆனால் 'இந்தியா வெளியேறு!' என்ற கோஷத்துடன் அதிபர் தேர்தலுக்கு வந்த முகமது மூய்ஸ் கடந்த நவம்பரில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிப் பதவியேற்றதும் மாலைதீவின்இராஜதந்திரஅணுகுமுறைகள், நிலைப்பாடுகளைத் தலைகீழாகவே மாற்றினார். மாலைதீவில் இதுவரை நிலை கொண்டிருந்து, பல்வேறு ஒத்தாசைப் பணிகளில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினரை நாட்டை விட்டு வெளியேறப் பணித்தார். பதவியேற்ற கையோடு சீனாவுக்கு விஜயம் செய்து, தங்கள் நாட்டின் சீனச் சார்புடைய புதிய போக்கை உறுதிப்படுத்தி, வெளிப்படுத்தினார். இப்போது இந்தியப் பெருங்கடலில் சீனா காலூன்றுவதற்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் சீனக் கப்பலுக்கு இடம் அளித்திருக்கின்றார் - அதுவும் இந்தியாவின் கடும் ஆட்சேபனைகளுக்கு மத்தியில்.

'இந்தியப் பெருங்கடல் இந்தியாவுக்கு தனி உரித்து அல்ல' என்று கூறும் சீனா இவ்விடயத்தில் தனது காலை அகலப் பரப்ப முயல்கின்றது என்பது வெளிப்படையானது.

தனது சீனச் சார்புப் போக்கின் காரணமாக இத்தகைய செயல்பாடுகளுக்கு இடமளிக்கும் மாலைதீவு அதன் மூலம் சர்வதேச வலுச்சமநிலைக்கான துவந்த யுத்தத்துக்குரிய களமாக - தளமாக - தனது கடற்பிரந்தியம் மாறுகின்றது என்பது கவனிக்க வேண்டும்.

புரிந்தோ புரியாமலோ - தெரிந்தோ தெரியாமலோ - சீனப்பக்கம் சாயும் மாலை தீவின்போக்கு இந்த பிராந்தியத்தில் பல்வேறு புதிய நெருக்கடிகளை - சவால்களை - பதற்றங்களை - ஏற்படுத்தப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம்.



# புலம்பெயர் தமிழர்கள் இலண்டனில் எதிர்ப்பு!

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர தின நிகழ்வுகள் இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் நேற்று நடைபெற்றன. ஆனால், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் கறுப்பு தினமாக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், பிரித்தானியாவின் இலண்டன் நகரில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்புப் பேரணியை நேற்று முன்னெடுத்தனர். இதன்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழர்களுக்குச் சர்வதேச மத்தியஸ் தத்துடனான தீர்வை வழங்க ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

பிரித்தானியாவில் உள்ள இலங் கைத் தூதரகத்துக்கு முன்பாக இலங்கை தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ள நிலை யில் அதற்கு நிகராக தமிழீழ விடுத லைப்புலிகளின் தமிழீழ தேசியக் கொடி நேற்று ஏற்றப்பட்டது. இலங்கை தேசி யக் கொடிக்கு மேலாக தமிழீழத் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது.





# கருவி மாற்றுத் திறனாளிகள் அமைப்புக்கு கட்டடம் அமைக்க சந்நிதி ஆச்சிரமம் உதவி!

யாழ்ப்பாணம் வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தால் கருவி மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் கட்டட நிர்மாணத்துக்காக 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 பைக்கற் சீமெந்துகளை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் நேரடியாக கொண்டுசென்று வழங்கியுள்ளார்.

இதேவேளை ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வெள்ளிக்கிழமை வாராந்த நிகழ்வாக ஆசிரியர் சிவஞானம் பாலமுரளியின் 'கந்தன் மகிமை' ஆன்மீக அருளுரை இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தொண்டைமானாறு தெற்கு ஜே/383 கிராம சேவையாளர் பிரிவில் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு நாற்றுக்கள், விதைப் பைக்கற்றுக்கள் வழங்குவதற்காக 20 ஆயிரம் ரூபா நிதி பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கப் பட்டது.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டு பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் 313 ஆவது மலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளியீட்டுரையை வலிகாமம் வலய இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.தேவமனோகரனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ஆ.சிவநாதனும் ஆற்றினர். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. யாழ் மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியில் உலர் உணவு உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.





# 76 ஆவது சுதந்திர தினத்தன்று 76 வயது ஓய்வூதியர் கௌரவிப்பு

## காரைதீவு பிரதேச செயலாளர் நடவடிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றபோது 76 வயதைப் பூர்த்தி செய்த ஓய்வூதியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலகத்தில் சிவில் ஓய்வூதியம்பெறும், இந்த வருடம் 76 வயதை பூர்த்திசெய்த ஓய்வூதியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு காரைதீவு பிரதேச செயலகத்தில் நீண்டகாலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் சிலரும் அவரது வீடுகளுக்கு சென்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டனர்.









# போரதீவுப்பற்று பிரதேசத்தில் சுதந்திர தினத்தில் இரத்ததானம்

(திலக்ஸ் ரெட்ணம்)

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாபெரும் குருதிக் கொடை முகாம் இன்று (05) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இரத்த தான நிகழ்வானது போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் “உதிரம் கொடுத்து உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இந்தக் குருதிக் கொடை முகாமில் அலுவலக உத்தியோகத்தர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# புதிய அதிபர்களுக்கு நிலைப்படுத்தல் கடிதம்

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய புதிய அதிபர்களுக்கான பாடசாலை நிலைப்படுத்தல் கடிதம் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

இலங்கை அதிபர் சேவை தரம் 03 இற்கான போட்டிப்பரீட்சை கடந்த 2019 இல் நடைபெற்றது.

இதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த 2023 இல் நடைபெற்று அதிபர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் பாடசாலை வழங்கும் பணி தற்போது இடம் பெற்றது.



# சைவத் தமிழ் மன்றத்தின் 4 ஆவது பட்டமளிப்பு விழா!

(அபு அலா)

சைவத்தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபை 2023 ஆம் ஆண்டு நடத்திய சைவ பண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் தேர்வுகளில் சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (03) மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

சைவத் தமிழ் மன்றத்தின் தலைவர் சைவப்புலவர் சைவபண்டிதர் பேராசிரியர் தி.சதானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா, கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் சைவ பண்டிதர் ஒருவரும் இளஞ் சைவ பண்டிதர்கள் பதினாறு பேரும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கான பட்டத்தை மன்றத்தின் போசகர் சைவப்புலவர் சைவபண்டிதர் கலாநிதி சா.தில்லைநாதன் வழங்கினார்.

செல்வி. சிவானந்தராசா அபிஷெனா (மகிழூர்முனை) சைவ பண்டிதர் பட்டத்தினையும், திருமதி. சாந்தி ஆனந்தகிருஷ்ணன் (கொழும்பு), செல்வி. கிருஷ்ணன் விதுர்சனா (முத்துக்கல்), செல்வி. சுந்துராஸ் பவேர்த்தனா (வீரமுனை), செல்வி. திருச்செல்வம் மதுஷானி (வீரமுனை), திருமதி தயனி கிருஷ்ணாகரன் (புதுக்குடியிருப்பு), செல்வி. தேவகடாட்சம் தனுஜா (கோமாரி), செல்வி ரஞ்சித்குமார் ரஜித்தா (ஆயித்தியமலை), செல்வி. நாகரூபிணி மாடசாமி (பேசாலை), செல்வி பாலச்சந்திரன் டினோஜா (கிளநொச்சி), செல்வி. ஐயனார் கோகிலவாணி (ஹட்டன்), செல்வி. ஜனார்த்தனி பரமேஸ்வரராஜா (நாவற்குடா), முத்துகுமார் கிருஷ்ணகுமார் (தெனியாய), செல்வி. சாந்தகுமார் பிரியங்கா (புதுக்குடியிருப்பு), செல்வி.தேவதாசன் ஜனனி (பதுளை), செல்வி ஜெயகுமார் விஜயரூபா (வவுனியா), சிவஸ்ரீ குலசிங்கம் சுபாஷ்கர் (நாவிதன்வெளி) ஆகியோர் இளஞ் சைவ பண்டிதர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதில், சிவஸ்ரீ ந.முரசொலிமாறன் குருக்கள், மன்றத்தின் பொதுச் செயலாளர் சைவப்புலவர் சைவபண்டிதர் செ.சாந்தரூபன், உபதலைவர் சைவப்புலவர் சைவபண்டிதர் சோபா ஜெயரஞ்சித், சைவப்புலவர் சைவ பண்டிதர் சிவஸ்ரீ யோ. கஜேந்திரா, தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சைவபண்டிதர் சிவஸ்ரீ தெ.தயமுகன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.












# சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் போதைப் பாவனை முறியடிப்பு

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

சாய்ந்தமருது பிரதேசத்தில் போதை பொருள் ஒழிப்பு மற்றும் முறியடிப்பு நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். எல் சம்சுதீன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு சமாதான நீதிபதிகள் சபை இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின வைபவத்தை சாய்ந்தமருதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (4) கொண்டாடியது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோது பொறுப்பதிகாரி சம்சுதீன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் இலங்கையர்களாக எல்லோரும் செயற்பட்டு பெற்ற சுதந்திரத்தைதான் இன்று கொண்டாடி கொண்டிருக்கிறோம். இது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் சேர்ந்த பெற்ற சுதந்திரம்.

நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தை அனைத்து மக்களும், அனைத்துப் பிரதேசங்களும் அனுபவிக்க வேண்டும். நான் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடந்த இரு வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றேன். இந்தப் பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரம் மற்றும் பாவனை அதிகமாக காணப்பட்டது.

பாரிய சவால்களுக்கு மத்தியில் நாம் இந்தப் பிரதேசத்தில் போதை பொருள் ஒழிப்பு மற்றும் முறியடிப்பு நடவடிக்கைகளில் சாதித்துள்ளோம். சட்டம் அதன் கடமையைச் செய்தது, அண்டிய இடங்களிலும் போதை பொருள் ஒழிப்பு மற்றும் முறியடிப்புகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சமாதான நீதிபதிகளின் சேவைகள் மதிப்பானவை, மகத்தானவை. சமாதான நீதிபதிகள் சமூகத்தின் கௌரவ பிரஜைகள். சமூகத்துக்கு உச்ச பட்ச சேவைகளை அவர்கள் வழங்க வேண்டும்.- என்றார்.





# கனடா சர்வதேச வர்த்தக கண்காட்சியும் வியாபார, முதலீட்டாளர்கள் மாநாடும்!

கனடா சர்வதேச வர்த்தக கண்காட்சி, வியாபார மற்றும் முதலீட்டாளர்கள் மாநாடு 2024 இற்கான ஆரம்ப நிகழ்வும் வர்த்தக மற்றும் பாரிய, சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடலும் அண்மையில் கொழும்பு 7 ஜெட்வின் ஹோட்டலில் நடைபெற்றன.

இலங்கையில் உள்ள கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனம் மற்றும் சர்வதேச வர்த்த இணைப்பாளர் கூட்டிணைப்பு ஆகியன ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி அம்ரி நிசாம் மற்றும் வணிக உலக சர்வதேச அமைப்பின் இயக்குனர் ரகு இந்திரகுமார், சர்வதேச வர்த்த இணைப்பாளர் கூட்டிணைப்பின் பணிப்பாளர் தன்வீர் ஆர். எம் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிங்கப்பூர் வர்த்தக போரத்தின் ஆளுநர் கலாநிதி சிந்தியா சாங் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில் வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர்.



# சுவதரணி மூலிகை பயிர் வாரம் அக்கரைப்பற்றில் அனுஷ்டிப்பு!

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம். எம். அன்சார் தலைமையில் நடைபெற்ற இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் “சுவதரணி மூலிகை பயிர் வாரம்” அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு நேற்றுப் பிரதேச செயலக வளாகத்தில் சுதந்திர தின நிகழ்வும் மூலிகை பயிர் நடும் நிகழ்வும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், செயலகத்தில் கடமையாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், உள்ளக மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும், சிறப்பு விருந்தினராக ஆயுள்வேத வைத்தியர் செய்னுலாப்டீன் ஜெஸ்மினா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மாலைதீவில் உள்ள இராணுவத்தை வெளியேற்றச் சம்மதித்தது இந்தியா!



இந்தியாவுடன் மேற்கொண்ட பேச்சுகளின் முடிவில் மாலைதீவில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்ற இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

எதிர்வரும் மே மாதத்துக்குள் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று மாலைதீவின் வெளிவிவகார அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்தியா – மாலைதீவுகள் இடையே 2 வாரங்களாக நடைபெற்று வரும் இரண்டாவது சுற்று பேச்சு டெல்லியில் நிறைவடைந்தது. இதனை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக முகமது முய்சு பதவியேற்றதன் பின்னர், இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையிலான பிரச்சினை ஆரம்பமாகியது.

முகமது முய்சு தேர்தல் வாக்குறுதியாக இந்திய இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று வாக்குறுதி அளித்திருந்தார். பதவியேற்றதன் பின்னர் இந்திய ஈராணுவத்தை நாட்டில் இருந்து வெளியேற்றுவோம் என்று முடிவில் உறுதியாக உள்ளார்.

அண்டை நாடுகளான இந்தியாவும் சீனாவும், மாலைதீவைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், முகமது முய்சு ஜனாதிபதியான பின்னர் இந்தியாவுடனான உறவில் விரிசல் நிலைமை ஏற்பட்டது.

ஜனாதிபதியான பின்னர் முகமது முய்சு முதல் அரச பயணமாக சீனாவுக்கு சென்றமையுடன் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள் இந்திய இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்ற காலக்கெடுவும் விதித்தார்.

தற்போது மாலைதீவு மற்றும் இந்தியா இந்த விவகாரம் தொடர்பில் முன்னெடுத்த பேச்சு முடிவில், மார்ச் 10 ஆம் திகதி முதற்கட்டமாக இராணுவத்தினரின் ஒரு பகுதியினர் வெளியேறுவர் என்றும் மே மாதம் 10 ஆம் திகதி எஞ்சிய இராணுவத்தினர் வெளியேறுவார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு ஆளில்லா விமானம்; ஒப்புதல் அளித்துள்ளது அமெரிக்கா!

## 33 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் வழங்கவுள்ளது



இந்தியாவுக்கு 31 எம்.கியூ. -9 பி ட்ரோன்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்துக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு ஆளில்லா விமானங்களுடன் கூடவே அதில் பொருத்தப்படும் ஏவுகணைகள் மற்றும் பிற உபகரணங்களும் விற்கப்படும் என்று பென்டகன் தெரிவித்துள்ளது.

சுமார் 4 பில்லியன் டொலர் அதாவது இந்திய மதிப்பில் 33 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள இந்த ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல ஆண்டுகளாக பேச்சு நடந்து வந்துள்ளது என்று ரொய்ட்டர்ஸ் செய்தி முகாமை தெரிவிக்கிறது.

ராணுவ பயன்பாட்டுக்காக இத்தகைய ஆளில்லா விமானங்களை வாங்குவது பற்றி இந்தியா 2018 இல் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளது. ஆனால் ஆயுதங்கள் இல்லாத ஆளில்லா விமானங்கள் மீது அதற்கு முன்பே இந்தியா ஆர்வம் காட்டியுள்ளது.


இருப்பினும், அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளதால் இந்த ஒப்பந்தம் இப்போது முடிவாகிவிட்டதாகச் சொல்ல முடியாது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அளித்துள்ள ஒப்புதல், ஒரு பெரிய தடை விலகியதற்கு சமம்.

ரஷ்யாவுக்கு நெருக்கமாகச் செல்லும் இந்தியாவைக் கவரும் முயற்சியாக இந்த ஆயுத விற்பனை பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன், அமெரிக்காவில் சீக்கிய பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுவை கொல்வதற்கான சதித்திட்டம் தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் இந்தியா முழு மனதுடன் விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர் என்று செய்திகள் வெளியாகின.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு அதிகார பூர்வ பயணமாக அமெரிக்கா சென்றபோது இந்த ஒப்பந்தத்தை விரைவுபடுத்துமாறு பைடன் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டார் என்றும் ரொய்ட்டர்ஸ் செய்தி தெரிவிக்கிறது.



# பா.ஜ.கவில் இணைய அழைப்பு வந்தது: டில்லி முதல்வர் கேஜ்ரிவால் குற்றச்சாட்டு

பா.ஜ.கவில் இணைய தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றும் ஆனால், ஒரு போதும் செல்ல மாட்டேன் எனவும் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் ஆம் ஆத்மி ஆட்சியை கவிழ்க்க தனது எம்.எல்.ஏக்கள் 7 பேருக்கு தலா 25 கோடி ரூபா கொடுக்க பா.ஜ.க. முன்வந்தது என முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் சமீபத்தில் கூறினார்.

இந்த குற்றச்சாட்டை மறுத்த பா.ஜ.க, டில்லி பொலிஸில் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் மற்றும் கல்வி அமைச்சர் ஆதிஷி ஆகியோர்மீது புகார் அளித்தது.

மேலும், மதுபான கொள்கைஊழல் வழக்கில், 5 முறை சம்மன் அனுப்பியும், அரவிந்த் கேஜ்ரிவால் ஆஜராகவில்லை என டெல்லி நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை சார்பில் நேற்று முன்தினம் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் டில்லியில் கிராரி என்ற இடத்தில் அரசு பாடசாலை கட்டட அடிக்கல் நாட்டும் விழாவில் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கலந்து கொண்டார்.

இதன்போது அவர் உரையாற்று கையில்,

“பா.ஜ.க. எங்களுக்கு எதிராக சதி செய்கிறது. இந்த முயற்சியில் அவர்கள் தோல்வியடைவர். நான் அவர்களுக்கு எதிராக செயல்படுகிறேன். இந்த நிலைப் பாட்டை கைவிட மாட்டேன். நான் பா.ஜ.கவில் இணைய வேண்டும் என கூறுகின்றனர். ஆனால், நான் ஒரு போதும் சேரமாட்டேன் என கூறிவிட்டேன்.

நான் எதற்கு பா.ஜ.கவில் இணைய வேண்டும்? நீங்கள் பா.ஜ.கவுக்கு சென்றால், நீங்கள் செய்தகுற்றங்கள் எல்லாம் மன்னிக்கப்படும். நாங்கள் என்ன தவறு செய்தோம்? நாங்கள் பாடசாலைகள், மருத்துவமனைகள் கட்டுகிறோம். சாலைகள் போடுகிறோம். கழிவுநீர்கால்வாய்களை சரி செய்கிறோம். இது குற்றமா?.” – என்றார்.

# அனைவருக்கும் கட்டணம் இல்லாமல் மின்சாரம் வழங்குவதே எனது இலக்கு

## பிரதமர் மோடி தெரிவிப்பு



கட்டணம் இல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்பதே தனது இலக்கு என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.


அசாம் மாநிலத்திற்கு 2 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மோடி, அங்கு சுமார் 11 ஆயிரத்து 599 கோடி ரூபா மதிப்பிலான நலத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதன்போது அவர் உரையாற்று கையில்,

“கடந்த 10 ஆண்டுகளில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் பிரசாரத்தை நோக்கி ஓடினோம். தற்போது நாங்கள் கட்டணம் இல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்ற அடுத்த நகர்வை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

இந்த வரவு- செலவுத் திட்டத்தில் மிகப்பெரிய அளவில் வீட்டின் மேற்கூரை மீது சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிப்பதற்கான சோளார் தகடுகள் அமைப்பது குறித்து மிகப்பெரிய அறிவிப்பு வெளியிட்டுள்ளோம். இந்த திட்டத்தின் கீழ், ஒரு கோடி குடும்பங்களுக்கு சோளார் தகடுகள் அமைப்பதற்கு மத்திய அரசு உதவி புரியும்.

மேலும், ஒவ்வொரு இந்திய குடிமகனின் வாழ்க்கையையும் வசதியானதாக்க வேண்டும் என்பதுதான் அரசின் இலக்காக உள்ளது.”– என்றார்.



# பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பாரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும்

## அமைச்சர் நிர்மலா சீதாராமன் நம்பிக்கை

பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந் தியா உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித் துள்ளார்.2024-2025 நிதி ஆண்டுக்கான இடைக் கால வரவு - செலவு திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில்,

"பிரதமர் மோடியின் கடந்த 10 ஆண்டு ஆட்சியில் இந் தியா பொருளாதார ரீதியாக பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் கவலைக்கிடமாக இருந்தது. இந்நிலையில், காங்கிர ஸின் 10 ஆண்டுகால ஆட்சியையும் பிரதமர் மோடி தலை மையிலான பா.ஜ.கவின் 10 ஆண்டுகால ஆட்சியையும் ஒப்பிட்டு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும் " என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பில் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

"எதிர்வரும் மக்களைவைத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் மோடி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தால், 2027 ஆம் ஆண்டுக்குள் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும். அந்த இலக்கை எட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பிரதமர் மோடி தலைமையிலான அரசு செய்யும்.

கொரோனா தொற்றால் நெருக்கடி ஏற்பட்ட போதும் மத்திய அரசின் கொள்கைகளால், நாடு பொருளாதார சரிவிலிருந்து விரைவிலேயே மீண்டது. தவிர, உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார நாடாகவும் மாறியது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் பொரு ளாதாரம் மேம்பட்ட நிலையில் உள்ளது.

தற்போது ஏ.ஐ. தொழில்நுட்ப சார்ந்து அதிக முதலீடு மேற்கொள்ளப்படுகிறது. அதேசமயம் அத்தகைய தொழில்நுட்பத்தால் வேலை இழப்பு ஏற்படும் என்ற அச்சம் முன்வைக்கப்படுகிறது. மனிதர்களின் தலையீடு இல்லாமல் ஏ.ஐ. தொழில்நுட்பம் இயங்காது. ஏ.ஐ. சார்ந்த முதலீட்டால், பல்வேறு தளங்களில் புதிய வாய்ப்புகள் உருவாகும்." - என்றார்.




# கிராமி விருது வென்ற இந்திய இசைக்குழு

சிறந்த அல்பத்துக்கான கிராமி விருதை இந்தியாவின் சக்தி இசைக்குழு வென்று சாதனை படைத்துள்ளது.

இசைத்துறையின் உயரிய விருதாகக் கருதப்படும் கிராமி விருது விழாவானது அமெரிக்காவில் நடைபெற்றது.

இந்நித லையில் சங்கர் மகாதேவன், செல்வகணேஷ் விநாயக்ராம், கணேஷ் ராஜகோபாலன், ஜாகீர் உசேன் ஆகி யோர் அடங்கிய இசைக்குழு இணைந்து உருவாக்கிய சக்தி அல்பத்துக்கு சிறந்த அல்பம் பிரிவில் கிராமி விருது கிடைத்துள்ளது. இந்த அல்பத்தில் மொத்தமாக 8 பாடல்கள் உள்ளன.

இந்த நிலையில், விருதுபெற்ற சக்தி இசைக்குழுவுக்கு பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.



# பாகிஸ்தானில் பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்: 10 பேர் பலி

வடக்கு பாகிஸ்தானில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இன்று அதிகாலை நடந்த இந்த பயங்கரவாதத் தாக்குதலில் 10 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் எதிர்வரும் 8 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவிருக் கிறது.

இந்த நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் மும்முரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. இதையொட்டி, பாகிஸ்தானில் வன்முறை சம்பவங்களும், குண்டு வெடிப்புகளும் அதிகரித்துள்ளன.

இதற்கமைய பாகிஸ்தானின் தேரா இஸ்மாயில் கானில் உள்ள சோட்வான் பொலிஸ் நிலையத்தில் இன்று அதி காலை 3 மணியளவில் தீவிரவாதிகள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் பொலிஸ் நிலையத்தில் இருந்த 10 பொலிஸார் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந் துள்ளனர்.

தீவிரவாதிகள் கடுமையான ஆயு தங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள் ளனர் என கூறப்படுகிறது. பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்து கை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள் ளனர். மேலும் துப்பாக்கிச்சூடும் நடத் தியுள்ளனர்.

30 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் மூன்று திசைகளில் இருந்து தாக்குதல் நடத்தினர் என்றும் இரண்டரை மணி நேரத்திற்கும் மேலாக துப்பாக்கிச் சண்டை நடந்தது எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைபர் பக்துன்க்வா பகுதி மற்றும் பலுசிஸ்தானில் கடந்த சில நாள்களாக தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# சிலியில் காட்டுத் தீ: 112 பேர் பலி

தென் அமெரிக்க நாடான சிலியில் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நூற்றுக்கணக்கானவர்களைக் காணவில்லை என்று அந்த நாட்டு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சிலி நாட்டின் வல்பரைசோ பகுதியில் உள்ள வனப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் திடீரென காட்டுத் தீ ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பல ஆயிரக் கணக்கான வீடுகள் பற்றி எரிந்து தீக்கிரையாகியுள்ளன. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக் கப்பட்டதையடுத்து, மீட்புப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்தக் காட்டுத் தீயில் 1931 இல் நிறுவப்பட்ட பிரபல தாவரவியல் பூங்கா ஒன்று நேற்று தீக்கிரையானது.

சிலியில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயானது, ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளையும் பாதித்துள்ளது. சிலியின் கரையோர நகரங்களில் புகை சூழ்ந்ததால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யானைகளின் அட்டகாசம் மட்டக்களப்பில் அதிகரிப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்துக்கு உட்பட்ட வெல்லாவெளி, பாலையடிவட்டை, திக்கோடை, களுமுந்தன்வெளி, தும்பங்கேணி, மண்டூர், காந்திபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சனிக்கிழமை (03) இரவு தும்பங்கேணி கிராமத்துக்குள் புகுந்த யானை தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தின் சுற்று மதிலின் ஒரு பகுதியை உடைத்து துவம்சம் செய்து விட்டுச் சென்றுள்ளது என்று அப்பகுதியிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

பட்டிருப்புக் கல்வி வலயத்தின் கீழுள்ள தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தியாலயம் விவசாயச் சூழலில் அமைந்துள்ளது. மிகத் தொலைவிலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் அப்பாடசாலைக்கு ஆசிரியர்கள் சென்று அப்பகுதி மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றனர்.

அதிபர், ஆசிரியர்களதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரதும் முயற்சிகளின் பலனாக அந்தப் பாடசாலைக்கு ஒரு பக்க மதில் கட்டப்பட்டுள்ளது. பாடசாலைக்கு மாணவர்களும் காட்டு யானைகளின் அச்சத்தின் மத்தியிலேயே சென்று வருகின்றனர்.

# சுரக்காய்க்கு வந்த மவுசு!

(பாறுக் ஷிஹான்)

சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் ஒரு கிலோ சுரக்காயின் சில்லறை விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், சம்மாந்துறை, பகுதிகளில் சுரக்காயின் விற்பனை ஏட்டிக்கு போட்டியாக எந்தவொரு விலை நிர்ணயம் இன்றி விற்பனை செய்யப்பட்டுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் முழுச் சுரக்காய் 150 முதல் 300 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திருமலையில் 'கொத்துவேலி' கவிதை நூல் வெளியீடு!

(ஹஸ்பர்)

நீலையூர் சுதா எழுதிய 'கொத்துவேலி' கவிதைக் தொகுப்பின் வெளியீடு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் நாளை மறுதினம் (07) மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வரவேற்புரையை எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனகதீபகாந்தனும், நூலாசிரியர்பற்றி சமூகசேவைத்திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதனும், நூல்பற்றிய நயப்புரையை ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா. இரத்தினசிங்கமும் வழங்குவர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கியமன்றத்தின் ஒருங்கமைப்பில், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் எழுத்தாளருமான சூ.பார்த்தீபன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார்.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர், அரச அதிபர், அனைத்து கிழக்கு மாகாணசபைச் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திருமலை வளாக முதல்வர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.